[2005 மார்ச் 16

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் உள்ள மனோரா சுற்றுலாத் தலத்தை விரிவுபடுத்த எவ்விதச் செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனோரா சுற்றுலாத் தலம் மிகப் பிரசித்திப் பெற்றது. இதை விரிவுபடுத்துவதற்கான முயற்சி எடுக்கவேண்டுமென்ற கோரிக்கையைச் சட்டமன்ற உறுப்பினர் திருஞானசம்பந்தம் அவர்கள் வைத்திருக்கிறார்கள். இதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்பதோடு, மிகப் பிரபலமான சுற்றுலாத் தலங்களான வேளாங்கன்னி, நாகப்பட்டினம், நாகூர், வேதாரண்யம் போன்ற பகுதிகள் (மணியடிக்கப் பெற்றது) சுனாமி (குறுக்கீடு) இல்லை, இல்லை சுற்றுலாத் தலத்தைப் பற்றிதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுற்றுலாத் தலம் என்றால் ஒட்டுமொத்தமாகக் கேட்கக் கூடாது.

திரு. வை. சிவபுண்ணியம்: இல்லை, இல்லை, இல்லை. கேட்டுவிடுகிறேன், கேட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். வினா எண் 171, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

171—

வேலைவாய்ப்பு அலுவலகம்

***61696—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்குவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2005 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனியப்பன்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திற்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், கிருஷ்ணகிரியில் செயல்பட்டு வருகிறது. தற்போது தருமபுரி மாவட்டத்திலிருந்து பிரித்து கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாக வைத்து புதிய மாவட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்குச் செயல்படுத்தி இருக்கிறார்கள். மாவட்டம் தனியாக பிரிந்ததன் காரணமாக, தருமபுரி வருவாய் மாவட்டத்திற்கென தனியாக வேலைவாய்ப்பு அலுவலகம் இல்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகிற சிறப்பான, நல்ல பல திட்டங்கள் காரணமாக இன்றைக்கு தருமபுரி மாவட்டத்தினுடைய கல்வித் தரம் மற்றும் வேலைவாய்ப்பினுடைய தேவை உயர்ந்து வருகிற காரணத்தினாலும், அனைத்துத் துறைகளிலும் தருமபுரி மாவட்டம் முன்னேறி வருகிற காரணத்தினாலும், மாவட்டத்தினுடைய வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் வகையிலே, மாவட்டத்தினுடைய மையப் பகுதியான மொரப்பூரிலே அந்த வேலைவாய்ப்பு அலுவலகம் வரவேண்டும் என்று கேட்டேன். இருந்தாலும்கூட மாவட்டத்தினுடைய தலைமையிடமான தருமபுரியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மாவினுடைய அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்கி வருகிறது. இதன்படி, சமீபத்தில் தருமபுரி மாவட்டத்தை, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களாகப் பிரிவினை செய்ததைத் தொடர்ந்து ஏற்கெனவே கிருஷ்ணகிரியில் இயங்கி வந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்காகத் தொடர்ந்து செயல்படுத்தவும், ஏற்கெனவே, ஓசூரில் இயங்கிவரும் துணை வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமாகத் தரம் உயர்த்தி, தருமபுரி மாவட்டத்திற்கென புதிய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் தோற்றுவிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, புதிய தருமபுரி மாவட்டத்திற்கென, தருமபுரியில் புதியதாக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்கப்படவுள்ள நிலையில் மொரப்பூரில் வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்குவதற்கான சாத்தியக்கூறு ஏதும் இல்லை என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 172, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

172—

கழிவுநீர்ச் சுத்திகரிப்பு

***35657—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியின் கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்து கழிவறைகளுக்கும், பிற சுகாதாரப் பணிகளுக்கும் பயன்படுத்தும் வகையில் அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில் மனிதக் கழிவுகள் கலக்காத கழிவுநீரும், மனிதக் கழிவுகள் கலந்த கழிவுநீரும் ஒரே கழிவுநீர்க் குழாய்மூலம் வெளியேற்றும் அமைப்பு உள்ளதால், மனிதக் கழிவுநீர் கலக்காத கழிவுநீரை தனியாகச் சேகரித்து, தனிக் குழாய்மூலம் அதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் சென்று, சுத்திகரித்து, மீண்டும் தனிக் குழாய் அமைப்பு மூலமாக குடிநீரல்லாத பிற பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்துவது மிகவும் கடினம். இருப்பினும், தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் அக்டோபர் 11, 2002-ன்படி ஒவ்வொரு அடுக்கு மாடி குடியிருப்புகளிலும், பொதுக் கட்டடங்களிலும் இரு வெவ்வேறு குழாய்கள் அமைக்கப்பட்டு, ஒன்று குளியலறை மற்றும் கை கழுவும் இடத்திலிருந்து வெளியேறும் நீரைத் தனிக் குழாய்மூலம் எடுத்து நீரைச் சேகரிக்கவும், மற்றொன்று கழிவறை நீரைச் சேகரிக்கவும் உபயோகிக்கப்பட வேண்டும்; கழிவறையிலிருந்து வரும் நீர் மட்டும்தான் தெருக் கழிவுநீர்க் குழாயுடன் இணைக்கப்பட வேண்டும்; ஒவ்வொரு கட்டடமும் குளியலறை மற்றும் கை கழுவும் உபயோகத்திலிருந்து வரும் நீரைக் கொண்டு செல்ல ஒரு தனிக் குழாய் அமையப் பெற்றிருக்க வேண்டும்; இவ்வாறு சேகரிக்கப்பட்ட நீரை இரசாயனக் கலப்பில்லாத அல்லது இயந்திர மறு சுழற்சிமூலம் போதுமான அளவு சுத்திகரிக்கப்பட்டு, கீழ்நிலைத் தொட்டியில்